**உறுப்பினர் செயலர் (பொ) மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்,**
**மாமல்லபுரம் அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை : திரு.வி.எம்.ராஜேந்திரன்.பி.இ.,**

**ந.க.எண். 454 / 2016 மாஉதிகு** **நாள் : 02.09.2016**

**பொருள்:** தொகுப்பு குடியிருப்பு கட்டிடம் - மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம், மாமல்லபுரம் - காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டம், திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் - தையூர் ஊராட்சி - தையூர் 'B' கிராமம் - சர்வே எண்கள். 1361/2A3A , 4; 1363/2pt; 1364/1Bpt; 1365pt; 1366/2A, 1366/1A1, 1B2A; 1370/11, 10pt, 8C2pt, 8D1Apt; 1373/2B4pt; 1374/2pt – 52964.01 சதுர மீட்டர் பரப்பளவு மனை ஒப்புதல் - தொகுப்பு குடியிருப்புகள், EWS, Club House உபயோக கட்டுமானங்களுக்கு ஏற்கனவே நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் இசைவு அளிக்கப்பட்டதில் தற்சமயம் திருத்திய உத்தேச கட்டுமானங்களுக்கு - திட்ட அனுமதி அளித்தல் குறித்து.

**பார்வை**

1. மனுதாரர் M/s. Alliance Villas (p) Ltd., சென்னை அவர்களின் கடிதம் நாள்.10.05.2016.
2. நகர் ஊரமைப்பு ஆணையர்(பொ), சென்னை அவர்களின் செயலாணை கடிதம் ந.க.எண்.20000/2015/ சிபி நாள் 20.01.2016.
3. 143-வது மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழும கூட்டம் தீர்மானம் எண்.09, நாள் 02.03.2016.
4. அரசாணை(நிலை) எண்.86, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள்28.03.2012
5. உறுப்பினர் செயலர்(பொ), மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் கடிதம் ந.க.எண்.454/2016 மாஉதிகு நாள்.12.05.2016.
6. நகர் ஊரமைப்பு ஆணையர்(பொ), சென்னை அவர்களின் நடவடிக்கைகள் கடிதம் ந.க.எண்.8454/2016/சிபி நாள் 20.07.2016
7. 144வது மாமல்லபுரம் உள்ளூர் திட்ட குழும கூட்டம் தீர்மானம் எண்.4 நாள். 02.09.2016.
8. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.7486/2009/ பிஏ2 நாள் 16.04.2009
9. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21075/2009/ பிஏ1 நாள் 04.04.2012
10. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள் 05.02.2016 மற்றும் 08.08.2016 (அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு கட்டணம், வளர்ச்சி கட்டணம். நன்னிலைவரிக் கட்டணம் மற்றும் 6% கால தாமத வட்டி செலுத்தக் கோரியது)
11. மனுதாரர் M/s. Alliance Villas (p) Ltd அவர்களின் கடிதம் நாள்.20.08.2016(அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு கட்டணம், வளர்ச்சி கட்டணம், நன்னிலைவரிக் கட்டணம் மற்றும் 6% கால தாமத வட்டி செலுத்தியது )

*****

**உத்திரவு**

மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழும பகுதி, காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டம், திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், தையூர் ஊராட்சி , தையூர் 'B' கிராமம், சர்வே எண்கள். 1361/2A3A , 4; 1363/2pt; 1364/1Bpt; 1365pt; 1366/2A, 1366/1A1, 1B2A; 1370/11, 10pt, 8C2pt, 1370/8D1Apt; 1373/2B4pt; 1374/2pt – 52964.01 சதுர மீட்டர் பரப்பு கொண்ட மனைக்கு ஏற்கனவே பார்வை 2-ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் செயலாணை கடிதத்தில் மேற்படி மனையிடத்திற்கு 1 முதல் 33 வரை என எல்லையிட்டு மனையிட ஒப்புதலும் மற்றும் அம்மனையில் அமையும் உத்தேசங்களுக்கு க.வ/ந.ஊ.இ எண்.27/2016 என எண்ணிடப்பட்டு இசைவு அளிக்கப்பட்டதில் தற்போது திருத்திய தொகுப்பு குடியிருப்புகள், EWS, Club House உபயோக உத்தேசங்கள் கீழ்கண்டவாறு அமைகின்றன.

**Area Statement**

**FSI area in Sq.m**

| Blocks Name | Ground Floor | First Floor | Second Floor | Terrace Floor | Total No.of Dewelling Units |
|---|---|---|---|---|---|
| BLOCK -1 | 773.53 | 843.43 | 75.84 | -- | 20 |
| BLOCK -2 | 1424.56 | 1511.94 | 410.47 | -- | 27 |
| BLOCK-3 | 1483.50 | 1578.29 | 762.11 | -- | 28 |
| BLOCK-4 | 726.06 | 775.72 | 370.64 | -- | 14 |
| BLOCK-5 | 779.96 | 862.54 | -- | -- | 22 |
| BLOCK-6 | 2016.57 | 2140.76 | 1022.76 | -- | 38 |
| BLOCK-7 | 2016.57 | 2140.76 | 1022.76 | -- | 38 |
| BLOCK-8 | 397.04 | 526.26 | 207.90 | -- | 8 |
| TYPE – A | 59.24 | 62.69 | -- | -- | 21 |
| TYPE – B | 59.24 | 62.69 | -- | -- | 16 |
| TYPE – C | 71.73 | 77.04 | -- | -- | 14 |
| TYPE – D | 71.73 | 77.04 | -- | -- | 19 |
| TYPE – E | 71.73 | 74.85 | -- | -- | 4 |
| TYPE – F | 71.73 | 74.85 | -- | -- | 6 |
| VILLA – 1 | 73.25 | 75.49 | -- | -- | 1 |
| VILLA – 2 | 76.35 | 81.93 | -- | -- | 1 |
| VILLA – 3 | 66.40 | 61.42 | -- | -- | 1 |
| VILLA – 4 | 66.40 | 61.42 | -- | -- | 1 |
| VILLA – 5 | 78.63 | 78.63 | -- | -- | 1 |
| VILLA – 6 | 49.64 | 61.42 | -- | -- | 1 |
| VILLA – 7 | 57.10 | 61.42 | -- | -- | 1 |
| VILLA – 8 | 97.56 | 101.55 | -- | -- | 1 |
| VILLA – 9 | 97.71 | 97.71 | -- | -- | 1 |
| VILLA – 10 | 84.04 | 85.94 | -- | -- | 1 |
| VILLA – 11 | 84.04 | 85.00 | -- | -- | 1 |
| VILLA – 12 | 97.70 | 97.70 | -- | -- | 1 |
| VILLA – 13 | 59.68 | 55.92 | -- | -- | 1 |
| VILLA – 14 | 67.37 | 62.43 | -- | -- | 1 |
| VILLA – 15 | 61.78 | 57.54 | -- | -- | 1 |
| VILLA - 16 | 61.78 | 57.54 | -- | -- | 1 |

| | Stilt Floor | First Floor | Second Floor | Third Floor | Fourth Floor | Terrace Floor | No. of Dwelling Units |
|---|---|---|---|---|---|---|---|
| EWS Block | Parking | 1124.03 | 1124.03 | 1124.03 | 1124.03 | -- | 20 Dwelling Units per Floor x 4 Floors |

<u>Club House</u>

| | |
|---|---|
| Ground Floor | - 221.02 |
| First Floor | - 186.98 |
| Second Floor | - 336.98 |
| Third Floor | - 261.87 |
| Terrace Floor | - --- |
| Swimming Pool | - --- |

| | |
|---|---|
| OSR - I | : 3417.80 Sq.m. |
| OSR - II | : 757.05 Sq.m. |
| OSR - III | : 842.22 Sq.m. |
| OSR - IV | : 271.81 Sq.m. |
| Total OSR | **: 5288.88 Sq.m** |

பார்வை 6-ல் கண்ட நகர் ஊரமைப்பு இயக்குநர். சென்னை அவர்களின் செயலாணை கடிதம் ந.க.எண்.8454/2016/சிபி நாள் 20.07.2016 -ல் மேற்கண்ட உத்தேச திருத்திய தொகுப்பு குடியிருப்பு உபயோகக் கட்டுமானத்திற்கு சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 49-ன் கீழ் உறுப்பினர் செயலர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்கள் திட்ட அனுமதி வழங்க இசைவு அளிக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் நகர் ஊரமைப்பு ஆணையரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட திருத்திய தொகுப்பு குடியிருப்புகள் Club House மற்றும் EWS Block கட்டிட வரைபடத்திற்கு **க.வ/ ந.ஊ.இ.எண்.133/2016** என எண்ணிடப்பட்டு பெறப்பட்டுள்ளது.

பார்வை 2-ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர்(பொ), சென்னை அவர்களின் செயலாணை கடிதம் ந.க.எண்.20000/2015/ சிபி நாள் 20.01.2016-ல் திட்ட அனுமதி வழங்க இசைவு அளிக்கப்பட்டு, பார்வை 3-ல் கண்டுள்ள நாள் 02.03.2016 அன்று நடைபெற்ற மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழும 143-வது கூட்டத்தில் கூட்டப் பொருள் எண்.09-ல் வைக்கப்பட்டு Approved என தீர்மானம் பெறப்பட்டுள்ளது. பார்வை 6-ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர்(பொ), சென்னை அவர்களின் நடவடிக்கைகள் கடிதம் ந.க.எண்.8454/2016/சிபி நாள் 20.07.2016-ல் சிறப்பு நிபந்தனைகள் வரிசை எண்.1-ல் 1 முதல் 14 வரை பொருந்தும் எனவும், சிறப்பு நிபந்தனைகள் வரிசை எண்.2-ல் Interest for I & A Charges should be collected from the date of demand raised எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி மனுதாரரிடம் பார்வை 10-ல் கண்ட இவ்வலுவலக கடிதம் மூலம் அடிப்படை வசதி மற்றும் உள்கட்டமைப்பு கட்டணம் கோரப்பட்டு பெறப்படவில்லை.

மனுதாரர் மேற்படி கட்டணங்கள் எதுவும் செலுத்தாமல் திருத்திய தொகுப்பு குடியிருப்புகள் உத்தேசத்தினை இவ்வலுவலகத்திற்கு 10.05.2016 தேதிய கடிதம் மூலம் விண்ணப்பித்து மேற்படி உத்தேசம் நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் ந.க.எண்.454/2016 மாஉதிகு நாள் 12.05.2016-ல் சமர்ப்பிக்கப்பட்டு பார்வை 6-ல் கண்ட நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் மூலம் திட்ட அனுமதி வழங்க இசைவளிக்கப்பட்டுள்ளது. பார்வை 10-ல் கண்ட இவ்வலுவலக கடிதம் மூலம் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் மனுதாரரிடம் கோரப்பட்டு பார்வை 11-ல் கண்ட மனுதாரரின் கடிதம் மூலம் கட்டணங்கள் பின்வருமாறு செலுத்தப்பட்டு பெறப்பட்டுள்ளது.

1. அடிப்படை வசதி மற்றும் உள்கட்டமைப்பு கட்டணம் மற்றும் அதற்குண்டான 6% காலதாமத வட்டியுடன் சேர்த்து ரூ.1,82,42,000/- SBI, Thirukalukundram கிளை நாள்.19.08.2016-ல் செலுத்தியதற்கான கருவூலக செலுத்து சீட்டு பெறப்பட்டுள்ளது.

2. அபிவிருத்தி கட்டணம் மற்றும் அதற்குண்டான 6% காலதாமத வட்டியுடன் சேர்த்து ரூ.8,03,200/-Kotak Mahindra Bank Chennai கிளை வரைவோலை எண்.501061 நாள் 11.08.2016 -ல். செலுத்தப்பட்டு அதற்கான விவரம் பெறப்பட்டுள்ளது.

3. நன்னிலை வரி ரூ.41,000/- SBI, Thirukalukundram கிளை, நாள்.19.08.2016-ல் செலுத்தியதற்கான கருவூலக செலுத்து சீட்டு பெறப்பட்டுள்ளது.

4. நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் கட்டிட அனுமதிக்கு இசைவு அளிக்கப்பட்ட இட அமைப்பு வரைபடத்தில் கண்டுள்ள நான்கு பொது உபயோக ஒதுக்கீடு திறவிடங்கள் மற்றும் அவற்றிற்கான அணுகு வழி ஆகியவற்றினை நிலையிலுள்ள சாலையிலிருந்து தானமாக தையூர் ஊராட்சிக்கு தானப்பத்திர எண்.4108/2016, நாள்.11.04.2016-ல் திருப்போரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து அதற்கான தானப்பத்திர நகல் பெறப்பட்டுள்ளது. அதன்படி பொது ஒதுக்கீடு திறவிடம் 5288.88 சதுர மீட்டர் மற்றும் அதற்கு அமையும் அணுகு சாலை 5339.87 சதுர மீட்டர் ஆகும்.

5. தையூர் கிராமம், சர்வே எண்.1482 'அ' பதிவேட்டின்படி அரசு புறம்போக்கு பாதை என குறிப்பிடப்பட்டுள்ளதில் பழைய மாமல்லபுரம் தார் சாலை அணுகு சாலையாக அமைகிறது. புல எண். வரைபடத்தின்படி சாலையில் அகலம் வடபுறம் 34.8 மீட்டர், தென்புறம் 38.0 மீட்டர், நடுவில் C என குறிப்பிடப்பட்ட இடத்தில் 23.2 மீட்டர் அகலமும் குறிப்பிடப்பட்டுள்ளது. இச்சாலையானது மாநில நெடுஞ்சாலைத்துறை சாலையாகும். மேற்படி சாலைக்கும் மனுதாரர் உத்தேச இடத்திற்கும் இடையில் 1373/2B7 அடங்கல்படி மரியாபேரி மற்றும் ஐந்து நபர்களுக்கு உரிமையுள்ள 5.0 மீட்டர் அகல இடம் அமைந்துள்ளது. மேற்படி மனையிடம் கிரையபத்திர நகல் எண்.3918/2016 நாள்.05.04.2016 திருப்போரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து அதற்கான விவரம் பெறப்பட்டுள்ளது.

பார்வை 7-ல் கண்டுள்ள 02.09.2016 அன்று நடைபெற்ற மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழும கூட்டத்தில் மேற்படி உத்தேசம் கூட்டப் பொருள் எண்.4-ல் வைக்கப்பட்டு திட்ட அனுமதி வழங்க தீர்மானம் பெறப்பட்டுள்ளது. நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் திருத்திய உத்தேச கட்டுமானங்களுக்கு திட்ட அனுமதி வழங்க தொழிற் நுட்ப இசைவளிக்கப்பட்டு மேலும், மேற்படி உத்தேசம் மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழும கூட்டப் பொருளில் வைக்கப்பட்டு திட்ட அனுமதி வழங்க தீர்மானம் பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்படி உத்தேச மனையிடத்திற்கு (1 முதல் 33 வரை) என எல்லையிட்டு **ம.வ/மா.உ.தி.கு எண்.26/2016** என எண்ணிடப்பட்டு மனையிட ஒப்புதலும், அம்மனையிடத்தில் அமையும் திருத்திய தொகுப்பு குடியிருப்பு கட்டிட வரைபடங்களுக்கு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971, பிரிவு 49(i) (ii) (iii)-ன் கீழ் **திட்ட அனுமதி எண். 30 ( 1 முதல் 20 வரை) / 2016** என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதியும் வழங்கப்படுகிறது.

இந்த திட்ட அனுமதி நகர் ஊரமைப்புச் சட்டம் 1971, பிரிவு 50-ன் படி திட்ட அனுமதி அளிக்கப்பட்ட தினத்திலிருந்து 02.09.2016 முதல் 01 .09.2019 வரை மூன்று ஆண்டுகளுக்கு மட்டுமே செல்லத்தக்கதாகும்.

<u>சிறப்பு நிபந்தனைகள்.</u>

1. The Project proponent/ Applicant shall not commence any activity, excepting fencing of the site and construction of temporary shed for guard, without obtaining Environment clearance under the EIA Notification, 2006 from the State Level Environment Impact Assessment Authority or the ministry of Environment and Forests, Government of India, as applicable to the project, as per the threshold limits. Any violation from the above requirement is liable for action under section 19 of the Environment (protection) Act, 1986.
2. பொது ஒதுக்கீடு திறவிடங்கள் நிறுவனத்தின் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற்று பராமரிக்க வேண்டும்.
3. பொது ஒதுக்கீடு திறவிடங்களை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி தானமாக பெற்றுக் கொண்டு அதன் விவரம் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும். இதனை சம்மந்தப்பட்ட அலுவலகம் உறுதிசெய்து கொள்ள வேண்டும்.
4. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.
5. மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.
6. Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rule made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permission is issued subject to the condition that the applicant / developer and also the architects / Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.
7. Applicant should obtain consent from Tamil Nadu Pollution Countrol Board Under Section 25 of the water Act 1974 for discharge of sewage.
8. "நகர் ஊரமைப்புத் துறை சட்டபூர்வமாக தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிபடுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பத்தாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்கள் (கிரய பத்திரம்) குத்தகை பத்திரம், பட்டா, தானபத்திரம், பொது அதிகாரப் பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினாலோ அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்பு துறை பொருத்தமான அமைப்பு அல்ல".
9. The applicant should follow the provisions laid down in the Tamil Nadu Urban Local bodies (Regulations and Monitoring of Swimming pools) Rules 2015.
10. The Conditions given in Fire Department NOC should be followed
11. The License renewal of structural Engineer from the local body என்பதற்கான விவரம் பெறப்பட வேண்டும்.
12. "The provisions in the G.O (Ms)No.17, H & UD (UD4) (3) department, dated:05.02.2016 relating to installation and use of Solar energy system, should be followed.

**நிபந்தனைகள்:**

1. உத்தேச பலமாடி குடியிருப்புகள், EWS, Club House உபயோகக் கட்டுமானத்திற்கு Solar water heating system அமைக்கப்பட வேண்டும்.
2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள்: 11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9. அரசாணை எண்.341/ந.நி. மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள்: 03.11.04-ன் படி செப்டிக் டேங்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.
10. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly Ash Bricks மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும் போது அவ்விடத்தில் அனைவருக்குதகும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் அசல் நகலுடன் ஏற்கனவே அளிக்கப்பட்ட உத்தரவு மற்றும் இவ்வாணையில் நகல் வாங்குபவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

திட்ட அனுமதி அளிக்கப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் இரண்டு தொகுப்புகள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மனுதாரர் மேற்கொண்டு தையூர் ஊராட்சி மன்றத் தலைவர் அவர்கள் அணுகுமாறு தெரிவிக்கப்படுகிறார்.

மேலும் திட்ட அனுமதி அளிக்கப்பட்ட உத்திரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகைச் சான்றினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு தையூர் ஊராட்சி மன்றத் தலைவர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

2.9.16

உறுப்பினர் செயலர் (பொ)
மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்,
மாமல்லபுரம்

2/9/16

**இணைப்பு :**
ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடங்கள் - 2 தொகுப்பு

**பெறுநர்**
ஊராட்சி மன்றத் தலைவர்,
தையூர் ஊராட்சி,
திருப்போரூர் வட்டம்/ ஊராட்சி ஒன்றியம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

**நகல்**
M/s. Alliance Villas Pvt Ltd
No.36/1. Gandhi Mandapam road,
Kotturpuram, Chennai – 85